Victorian Equal Opportunity
& Human Rights Commission

# விக்ரோறியாவில் உங்களது உரிமைகளும் அதற்கு உதவக்கூடியவர்களும்

## மனித உரிமைகள்

விக்ரோறியாவில் உங்களுக்கு எதிராக யாரவது இன சமய பால் அரசியல் நம்பிக்கைகள் மற்றும் பல காரணங்களுக்காக வேறுபாடு காட்டுவார்களானால் அது சட்ட விரோதமானது. உங்களுக்கும் உரிமைகள் இருக்கின்றன. நீங்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு நன்முறையில் நடத்தப்படுவதற்கு உங்களது சமயத்தைப் பின்பற்றுவதற்கு மற்றும் உங்களது கலை சார் விழுமியங்களையும் குடும்பத்தையும் ரசித்து மகிழ்வதற்கும் உரித்துடையவர்கள்.

இவை மனித உரிமைகள் என அழைக்கப்படும். நீங்கள் எங்கே பிறந்திருந்தாலும் விக்ரோறியாவில் எல்லோருக்கும் சம உரிமைகள் உண்டு.

## வேறுபாடு

நீங்கள் மாறுபட்ட முறையிலோ அல்லது நன்முறையற்றுப் பின்வரும் இடங்களில் நடத்தப்பட்டால் அது சட்டத்திற்கு விரோதமானதாகும்: வேலைத் தளம் வீடு வாடைகைக்கு எடுக்கும் பொழுது பள்ளிக்கூடம் கடை அல்லது உணவகம் அல்லது போட்டி விளையாட்டு

பின்வரும் காரணங்களுக்காக மக்கள் உங்களை நன்முறையற்று நடத்த முடியாது

- உங்களின் நிறம் கலைசார் விழுமியங்கள் அல்லது இனம் குடும்பப் பின்னணி அல்லது நீங்கள் எந்த நாட்டிலிருந்து வந்தீர்கள் என்பது
- உங்கள் சமயம் சமய நம்பிக்கை அல்லது செயற்பாடு. உதாரணத்திற்கு நீங்கள் யூதக் கோயிலுக்கு அல்லது கிறித்தவக் கோயிலுக்குச் செல்வது. சமய நம்பிக்கையற்றவாராக நீங்கள் இருக்கும் உரிமை உங்களுக்குண்டு
- செயற் குறைபாடு நோய் அல்லது காயம். உதாரணம்: உங்களுக்கு உடற் குறைபாடு அல்லது நோய் இருப்பின் உங்களைத் தண்டிக்காது உங்களுக்கு ஏற்ற வாறு வேலை செய்வதற்கு வேறு ஒழுங்குகள் செய்து தருமாறு பணி முதல்வரை வேண்டலாம்
- நீங்கள் பெற்றோராக அல்லது பராமரிப்பாளராகவிருப்பின்: உதாரணம்: பிள்ளைகளையோ அல்லது குடும்ப அங்கத்தவர்களையோ பராமரிப்பவராக இருப்பின் வேலை நேரங்களில் மாற்றம் அல்லது சில மணி நேரங்கள் விடுப்பு (லீவு) முதலிய ஒழுங்குகளைக் கேட்கலாம்
- உங்கள் வயது. உதாரணம்: நீங்கள் ஒரு வேலைக்கு மனுச் செய்தால் நீங்கள் வயது கூடியவர் அல்லது குறைந்தவர் எனக் கூறமுடியாது
- நீங்கள் ஆண் அல்லது பெண்
- கர்ப்பமாக உள்ளவர் அல்லது தாய்ப்பால் ஊட்டுபவர்: உதாரணம்: பொது இடங்களான உணவகமானாலும் அல்லது விளையாட்டு மைதானமானாலும் நீங்கள் கர்ப்பமாகவிருந்தாலும் அல்லது தாய்ப்பால் ஊட்டுபவராக இருந்தாலும் வேலை செய்யத் தீர்மானிக்கலாம்
- சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட உடலுறவு: உதாரணம்: நீங்கள் யாருடன் உடலுறவு வைத்திருக்கிறீர்கள் என்பதற்காக உங்களை நன்முறையற்று நடத்த முடியாது
- உங்கள் பால் அடையாளம் அல்லது பால் அமைவு: உதாரணம்: ஆணுடன் ஆண் சேர்க்கை, பெண்ணுடன் பெண் சேர்க்கை, இருபால் சேர்க்கை அறவாணிகள், ஆணாகவிருந்தால் பெண் என எண்ணல் பெண்ணாகவிருந்தால் ஆணென எண்ணல் வினோதமானவர்கள் மற்றும் இயற்கைப்பால் இணைவுடையோர் அனைவரும் சம உரிமையுடையவர்களே
- நீங்கள் திருமணம் செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும். நீங்கள் திருமணம் செய்திருந்தாலும திருமண இரத்துச் செய்திருந்தாலும் திருமணம் ஆகாதவராயிருந்தாலும் அல்லது ஒன்றாய் வாழ்ந்தாலும் நீங்கள் நன்முறையிலேயே நடத்தப்பட வேண்டும்
- உங்கள் உடல் அமைப்பு: உதாரணம் உயரம் பருமன் அளவு தலைமுடி அல்லது பிறவிக் குறி. போன்ற காரணங்களுக்காக நன்முறையற்று நடத்த முடியாது
- வேலைத்தளத்தில் உங்கள் உரிமைகளுக்கான உங்கள் செயற்பாடுகள்: உதாரணம்: உங்களுக்கு வேலைத் தளத்தில் சிக்கல்களிருந்தால் அதையிட்டுக் கேள்விகள் கேட்பதற்காகவோ அன்றி கதைப்பதற்காகவோ தண்டிக்கப்படவோ அல்லது வேலை நீக்கமோ செய்யப்படவோ முடியாது

- தொழிற் சங்கத் செயற்பாடுகள்: உதாரணம்: நீங்கள் ஒரு தொழிற் சங்க அங்கத்தவர் என்பதற்காகவோ அல்லது வேலை நிறுத்தம் செய்ததற்காகவோ வேலை நீக்கம் செய்யப்பட முடியாது
- உங்கள் அரசியல் அரசியற் செயற்பாடுகள் அல்லது அரசியல் நம்பிக்கைகள் அல்லது அரசியற் செயற்பாடுகளில் ஈடுபடாமை.

அதே சமயம் இதே காரணங்களுக்காக நீங்களும் யாரையம் நன்முறையற்று நடத்துவது சட்டத்திற்கு முரணானது.

உங்களுக்கு மேலும் தகவல்கள் தேவைப்படின் உங்கள் மனித உரிமைகள் அல்லது நன்முறையற்ற நடைமுறைகளும் மற்றும் நீங்கள் என்ன செய்யலாம் என அறிய உங்களுக்கு உதவி தேவைப்படின் அது சம்மந்தமாக அறிய விரும்பினால் ஆணையத்தைத் தொடர்பு கொள்ள **1300 292 153** அல்லது மொழிபெயர்ப்பாளரை வேண்டுவதற்கு **1300 152 494** எண்களில் தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் ஆணையத்திடம் உதவி நாடியதற்காக அல்லது முறையிட்டதற்காக உங்களைத் தண்டிக்கவோ அல்லது நன்முறையற்று நடத்தமுடியாது..அத்துடன் முறையீட்டைக் கையாள்பவர்கள மட்டுமே அதை அறிந்திருப்பார்கள. முறையீட்டைப் பதிவு செய்வதனால் நீங்கள் வழக்காடு மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்ற அவசியமில்லை.

மேலதிக விவரங்களுக்கு நீங்கள் எங்கள் இணையத் தளத்திற்குச் சென்று பார்வையிடலாம் (**humanrightscommission.vic.gov.au**). அத்துடன பொது இடங்களிலும் வேலைத் தளத்திலும், அரசத் திணைக்களங்களிலும், உங்களுக்குள்ள உரிமைகள் சம்பந்தமாக நாம், மேலும் பல தகவல்களை இலவசமாக வழங்குவோம்.

Victorian Equal Opportunity & Human Rights Commission

## Need more information?

Contact the Commission:


| | |
|---|---|
| Enquiry Line | 1300 292 153 or (03) 9032 3583 |
| Fax | 1300 891 858 |
| TTY | 1300 289 621 |
| Email | enquiries@veohrc.vic.gov.au |
| Website | humanrightscommission.vic.gov.au |


## Accessible formats

This publication is available to download from our website at humanrightscommission.vic.gov.au/resources in PDF and RTF. Please contact the Commission if you require other accessible formats.

## We welcome your feedback!

Were these resources useful? Easy to use? Would you like to see something else included? Please email us at communications@veohrc.vic.gov.au.


Published by the Victorian Equal Opportunity and Human Rights Commission, Level 3, 204 Lygon Street, Carlton Victoria 3053. May 2013.



Disclaimer: This information is intended as a guide only. It is not a substitute for legal advice.